# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

---

*(2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2012, நவெம்பர் மாதம் 16 ஆம் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

[2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.-ஓ. 19/2008

**மாநகரசபைகள் கட்டளைச் சட்டம், நகரசபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டம் என்பவற்றைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயரும் ஏற்புடைமையும்.

**1.** இச்சட்டம், 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமெனபதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 5,9 மற்றும் 13 ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகள், விடயத்துக்கேற்ப, மாநகர சபையொன்றின் மாநகர முதல்வரின் அல்லது நகரசபையொன்றின் தலைவரின் அல்லது பிரதேச சபையொன்றின் தவிசாளரின் தேர்தலுக்கு, அத்தகைய தேர்தல் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி நடைபெறுமிடத்து, ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும்.

## பாகம் I

### (252 ஆம் அத்தியாயமான) மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்துக்கான திருத்தங்கள்

252 ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவினை மாற்றீடு செய்தல்.

**2.** (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (252 ஆம் அத்தியாயமான) மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப்பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"மாநகர சபைகளின் அமைப்பு.

5. (1) ஒவ்வொரு மாநகரசபையும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 3இ என்னும் பிரிவின் கீழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கப்படும் கட்டளைமூலம் அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகர சபை உறுப்பினர்களின் அத்தகைய எண்ணிக்கை ; அத்துடன்

(ஆ) மாநகரசபை உறுப்பினர்களின் தேர்தலுக்கென நடாத்தப்பட்ட தேர்தலொன்றில் சபையில் ஏதேனும் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிராத தேருநர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு, (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ என்னும் பிரிவின்கீழ் மாநகரசபை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட வேண்டிய, அக்கட்டளைச் சட்டத்தின் 3இ என்னும் பிரிவின் கீழ் ஆக்கப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் (அ) என்னும் பந்தியின்கீழ் தீர்மானிக்கப்பட்டவாறான தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகர சபை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் முப்பது சதவீதத்தை விஞ்சாத வேறு மாநகரசபை உறுப்பினர்களின் அத்தகைய எண்ணிக்கை.

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்படும் முப்பது சதவீதத்தை அமைக்கின்ற எண்ணிக்கை முழு எண்ணொன்றாகவும் பின்னமாகவும் இருக்கின்றவிடத்து, முழு எண்ணானது அவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக அத்தகைய முப்பது சதவீதத்தை அமைக்க வேண்டிய எண்ணிக்கையாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "உள்ளூரதிகாரசபைக்கான தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க" என்னும் சொற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "(262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வெற்றிடத்தை நிரப்புவதற்கு முற்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆள், அச்சபையின் மாநகரசபை உறுப்பினர்களின் அடுத்துப்பின்வரும் பொதுத் தேர்தல்வரை, மாநகர சபை உறுப்பினரொருவராகப் பதவிவகித்தலும் வேண்டும்." என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற் றிருத்தப்படுகின்றது.

**4**. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :-

"(ஆ) அவரது மாநகர முதல்வர் பதவியை அல்லது பிரதி மாநகர முதல்வர் பதவியைத் துறக்கின்ற அல்லது வறிதாக்குகின்ற மாநகர முதல்வர் ஒருவர் அல்லது பிரதி மாநகர முதல்வர் ஒருவர் எவ்வாறாயினும் மாநகரசபை உறுப்பினரொருவராகவிருப்பதைத் தொடருதல் வேண்டும்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :-

"(7) ஒரு மாநகரசபையின் மாநகர முதல்வர் பதவி வறிதாகும் போதிலெல்லாம், அத்தகைய வெற்றிடம் பற்றிய அறிவித்தல், மாநகரசபை ஆணையாளரினால் உள்ளூராட்சி ஆணையாளருக்கு உடனடியாகக் கொடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், உள்ளூராட்சி ஆணையாளர் அதன்மேல், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபையின் தேர்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் கட்டளைச் சட்டத்தில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு முற்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவை மாற்றீடு செய்தல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(3) மாநகர சபை உறுப்பினரொருவர் -

(அ) மாநகரசபை உறுப்பினர் ஒவ்வொருவரும் ஆகக்குறைந்தது இரண்டு நிலையியற் குழுக்களில் பணியாற்றுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் வரை இரண்டு நிலையியற் குழுக்களில் தேர்ந் தெடுக்கப்படுவதற்கு தகவுடையவராதலாகாது ;

(ஆ) வேறு மாநகரசபை உறுப்பினர் ஒவ்வொருவரும் ஆகக்குறைந்தது ஒரு நிலையியற் குழுவில் பணியாற்றுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் வரை மூன்று நிலையியற்குழுக்களில், தேர்ந்தெடுக் கப்படுவதற்கு தகுதியுடையவராதலாகாது :

ஆயின், எந்த சந்தர்ப்பத்திலும் மாநகர உறுப் பினரொருவர் மூன்றுக்கு மேற்பட்ட நிலையியற் குழுக்களுக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதி யுடையவராதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 189 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 189 ஆம் பிரிவு, 189 ஆம் பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"மாநகர நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்படுவதற்கான காசோலைகள், கட்டளைகள் முதலியன.

189. மாநகர நிதியத்திலிருந்து பணங்களைக் கொடுப்பனவு செய்வதற்கான எல்லாக் காசோலைகளும் கட்டளைகளும், மாநகர முதல்வர் தவிர்ந்த சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட இரண்டு அலுவலர்களினால் கையொப்பமிடப் படுதல் வேண்டுமென்பதுடன், மாநகர நிதியம் எந்த வங்கியில் தாபிக்கப்படுகின்றதோ அந்த வங்கி, சொல்லப்பட்ட நிதியத்திலிருந்து அவ்வாறு கையொப்பமிடப்பட்ட எல்லாக் காசோலைகளை யும் அல்லது கட்டளைகளையும் செலுத்தலாம்.".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 215அ என்னும் பிரிவு, "கருதப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 215அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

"கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், சபையானது, இக்கட்டளைச் சட்டத்தின் 214 ஆம், 215 ஆம் பிரிவுகளுக்கிணங்க சபையின் பதவிக்காலம் தொடங்கியதிலிருந்து இரண்டாண்டுக் காலப்பகுதிக்குப் பின்னர் ஏதேனும் வரவு செலவுத்திட்டத்தில் அல்லது குறைநிரப்பு வரவுசெலவுத்திட்டத்தில் உள்ள எல்லா அல்லது எவையேனும் விடயங்களைத் திரிபுபடுத்தினால் அல்லது நிராகரித்தால் அல்லது மாநகர முதல்வரினால் எந்நேரத்திலேனும் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் விடயத்தை அதற்குச் சேர்த்தால், அத்துடன் சபையின் அத்தகைய முடிபுக்கு மாநகர முதல்வர் உடன்படாவிட்டால், அவர், சொல்லப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தை மேலும் பரிசீலனை செய்யப்படுவதற்காகச் சபையிடம் மீளச் சமர்ப்பித்தல் வேண்டும். ஒரு வரவுசெலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவுசெலவுத்திட்டம், அது இரண்டாவது தடவை யாக மீளச் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இரண்டு வாரங்களுக்குள் சபையினால் நிறைவேற்றப்படாதவிடத்து, மாநகர முதல்வர், சொல்லப்பட்ட இரண்டு வார காலப்பகுதியின் முடிவில் மாநகர முதல்வர் என்ற பதவியிலிருந்து விலகியுள்ளாரெனக் கருதப்படு தல் வேண்டும்.".

## பாகம் II

### (255 ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச் சட்டத்திற்கான திருத்தங்கள்

8. (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "முதன்மைச் சட்ட வாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (255 ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப்பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 255 ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவினை மாற்றீடு செய்தல்.

நகரசபைகளின் அமைப்பு.

5. (1) ஒவ்வொரு நகரசபையும் பின்வரும் உறுப் பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 3இ என்னும் பிரிவின்கீழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கப்படும் கட்டளைமூலம் அமைச்சர் தீர்மானிக்கின்றவாறான வேறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் அத்தகைய எண்ணிக்கை ; அத்துடன்

(ஆ) உறுப்பினர்களின் தேர்தலுக்கென நடாத்தப்பட்ட தேர்தலொன்றில், சபையில் ஏதேனும் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிராத தேருநர்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ என்னும் பிரிவின்கீழ் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படவேண்டிய, (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் கள் கட்டளைச் சட்டத்தின் 3இ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் தீர்மானிக்கப்பட்டவாறான தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் முப்பது சதவீதத்தை விஞ்சாத வேறு உறுப்பினர்களின் அத்தகைய எண்ணிக்கை.

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்படும் முப்பது சதவீதத்தை அமைக்கின்ற எண்ணிக்கை முழு எண்ணொன்றாகவும் பின்னமாகவும் இருக்கின்றவிடத்து, முழு எண்ணானது அவ்வுட் பிரிவின் நோக்கத்திற்காக அத்தகைய முப்பது சதவீதத்தை அமைக்க வேண்டியதான எண்ணிக்கை இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "அதற்கென அப்போதைக்கு ஏற்புடையதாகும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க" என்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்களுக்குப் பதிலாக "(262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக் கிணங்க" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**10**. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு, மேலும் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அதன்பொருட்டு அப்போதைக்கு ஏற்புடையப்படற்பாலதான எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "பதவிவகித்தல் வேண்டும்." என்னும் சொற்களிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவுவரையான சொற்களுக்குப் பதிலாக "பதவிவகித்தல் வேண்டும். அவரது தலைவர் பதவியை அல்லது துணைத்தலைவர் பதவியைத் துறக்கின்ற அல்லது வறிதாக்குகின்ற தலைவர் அல்லது துணைத்தலைவரொருவர், எவ்வாறாயினும் நகரசபை உறுப்பினராகவிருப்பதைத் தொடருதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(7) நகரசபையொன்றின் தவிசாளர் பதவி வறிதாகும்போதெல்லாம், அத்தகைய வெற்றிடம் பற்றிய அறிவித்தல் சபையின் செயலாளரினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சி ஆணையாளருக்கு உடனடியாகக் கொடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், உள்ளூராட்சி ஆணையாளர், அதன்மேல், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தில் அதற்காக ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு முற்படுதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 159 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 159 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(2) நகரசபை உள்ளூர் நிதியங்களிலிருந்து பணங்களைக் கொடுப்பனவு செய்வதற்கான எல்லாக் காசோலைகளும் அல்லது கட்டளைகளும், உள்ளூர் அதிகாரசபைகளின் ஆணையாளரின் அங்கீகாரத்துக்கமைய, அந்நோக்கத்துக்காகச் சபையினால் விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட சபையின் தலைவர் தவிர்ந்த இரண்டு அலுவலர்களினால் கையொப்பமிடப்படுதல் வேண்டுமென்பதுடன், நிதியம் எந்த வங்கியில் தாபிக்கப்படுகின்றதோ அந்த வங்கி, சொல்லப்பட்ட நிதியத்திலிருந்து அவ்வாறு கையொப்பமிடப்பட்ட எல்லாக் காசோலைகளையும் அல்லது கட்டளைகளையும் செலுத்தலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 178அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**12.** ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 178அ என்னும் பிரிவு, "கருதப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

"கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், சபையானது, இக்கட்டளைச் சட்டத்தின் 178 ஆம் பிரிவுக்கும் 178அ என்னும் பிரிவுக்குமிணங்க சபையின் பதவிக்காலம் தொடங்கியதிலிருந்து இரண்டாண்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்பகுதிக்குப் பின்னர் ஏதேனும் வரவு செலவுத்திட்டத்தில் அல்லது குறைநிரப்பு வரவுசெலவுத்திட்டத்தில் உள்ள எல்லா அல்லது எவையேனும் விடயங்களைத் திரிபுபடுத்தினால் அல்லது நிராகரித்தால் அல்லது தலைவரினால் எந்நேரத்திலேனும் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் விடயத்தை அதற்குச் சேர்த்தால், அத்துடன் சபையின் அத்தகைய முடிவுக்கு தலைவர் உடன்படாவிட்டால், அவர், சொல்லப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை மேலும் பரிசீலனை செய்யப்படுவதற்காகச் சபையிடம் மீளச் சமர்ப்பித்தல் வேண்டும். ஒரு வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவுசெலவுத்திட்டம், அது இரண்டாவது தடவையாக மீளச் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இரண்டு வாரங்களுக்குள் சபையினால் நிறைவேற்றப்படாத விடத்து, தலைவர், சொல்லப்பட்ட இரண்டு வாரக் காலப் பகுதியின் முடிவில் தலைவர் என்ற பதவியிலிருந்து விலகியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.".

**13**. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 184 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், "அதற்கென ஏற்புடையதாகவிருக்கும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 184 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**14**. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 249 ஆம் பிரிவில், "தலைவர் மற்றும் துணைத்தலைவர்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தில், "அதற்கென அப்போதைக்கு ஏற்புடையதான எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 249 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகம் III

### 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்துக்கான திருத்தங்கள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சட்டத்தின் 4 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**15.** (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவானது, இத்தால் நீக்கப்படுகின்றது என்பதுடன் அதற்குப்பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது.

"பிரதேச சபையின் அமைப்பு.

4. (1) இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றின்மூலம் அமைக்கப்பட்ட பிரதேச சபை ஒன்று பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் –

(அ) (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 3இ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளைமூலம் அமைச்சர் தீர்மானிக்கின்றவாறான தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் அத்தகைய எண்ணிக்கை ; அத்துடன்

(ஆ) உறுப்பினர்களின் தேர்தலுக்கென நடாத்தப்பட்ட தேர்தலொன்றில் சபையில் ஏதேனும் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிராத தேருநர்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு, (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ என்னும் பிரிவின்கீழ் உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்படவேண்டிய, (அ) என்னும் பந்தியின்கீழ் தீர்மானிக்கப்பட்ட உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையின் முப்பது சத வீதத்தை விஞ்சாத வேறு உறுப்பினர்களின் அத்தகைய எண்ணிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்படும் முப்பது சதவீதத்தை அமைக்கின்ற எண்ணிக்கை முழு எண்ணொன்றாகவும் பின்னமாகவும் இருக்கின்றவிடத்து, முழு எண்ணானது அவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக அத்தகைய முப்பது சதவீதத்தை அமைக்கவேண்டியதான எண்ணிக்கையாகவிருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 133 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 133 ஆம் பிரிவு, அப்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"பிரதேச சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்படுவதற்கான காசோலைகள், கட்டளைகள் முதலியன.

133. பிரதேசசபை நிதியத்திலிருந்து பணங்களைக் கொடுப்பனவு செய்வதற்கான எல்லாக் காசோலைகளும் கட்டளைகளும், ஆணையாளரின் அங்கீகாரத்துக்கமைய, சபையின் தவிசாளர் தவிர்ந்த சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட இரண்டு அலுவலர்களினால் கையொப்பமிடப்படுதல் வேண்டுமென்பதுடன், பிரதேசசபை நிதியம் எந்த வங்கியில் தாபிக்கப்பட்டுள்ளதோ அந்த வங்கி, சொல்லப்பட்ட நிதியத்திலிருந்து அவ்வாறு கையொப்பமிடப்பட்ட எல்லாக் காசோலைகளையும் அல்லது கட்டளைகளையும் செலுத்தலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 169 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 169 ஆம் பிரிவு, "கருதப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், சபையானது, இச்சட்டத்தின் 168 ஆம், 169 ஆம் பிரிவுகளுக்கிணங்க சபையின் பதவிக்காலம் தொடங்கியதிலிருந்து இரண்டாண்டுக் காலப்பகுதிக்குப் பின்னர் ஏதேனும் வரவு செலவுத் திட்டத்தில் அல்லது குறைநிரப்பு வரவுசெலவுத்திட்டத்தில் உள்ள எல்லா அல்லது எவையேனும் விடயங்களைத் திரிபுபடுத்தினால் அல்லது நிராகரித்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது தவிசாளரினால் எந்நேரத்திலேனும் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் விடயத்தை அதற்குச் சேர்த்தால், அத்துடன் சபையின் அத்தகைய முடிபுக்கு தவிசாளர் உடன்படாவிட்டால், அவர், சொல்லப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தை மேலும் பரிசீலனை செய்யப்படுவதற்காகச் சபையிடம் மீளச் சமர்ப்பித்தல் வேண்டும். ஒரு வரவுசெலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவுசெலவுத்திட்டம், அது இரண்டாவது தடவையாக மீளச் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இரண்டு வாரங்களுக்குள் சபையினால் நிறைவேற்றப்படாதவிடத்து, தவிசாளர் சொல்லப்பட்ட இரண்டு வார காலப்பகுதியின் முடிவில் தவிசாளர் என்ற பதவியிலிருந்து விலகியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.".

ஒவ்வாமையின் போது சிங்கள உரை மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**18**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org